# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# அக்கினியின் நாயகன்

எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Lazarus
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: E. Frischbutter

**கதைகள்** 60 **ல்** 24

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil

இஸ்ரவேலுக்கு எல்லாமே தீமையாக இருந்தது. ராஜாவும், ராணியும் தேவனை வெறுத்தார்கள். எவ்வளவு ஒரு மோசமான உதாரணம்!



1

சீக்கீரமாகவே ஜனங்களும் தேவனை வெறுத்தார்கள் மற்றும் தவறான தேவனை வழிபடத்தொடங்கினார்கள். யாராவது தேவனை நேசித்தார்களா?



2

ஆமாம்! உண்மையிலே ஆராதித்த ஒரு சிலர் இருந்தார்கள். ஒரு நாள், அவர்களில் ஒருவனிடத்தில் தேவன் பேசினார். அவன் பேர் எலியா.



3

துஷ்ட ராஜாவாகிய ஆகாப்பிடம் எலியா சொன்னது என்னவென்றால், "என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களில் பனியும், மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்."



4

அதனுடைய அர்த்தம் பஞ்சம்! தேவன் தன்னுடைய இஸ்ரவேல் ஜனங்களை தொடர்ந்து தீய வழியிலே நடக்க அனுமதிக்க மாட்டார்.



5



ராஜாவை எச்சரித்த பின்பாக, தேவன் எலியாவை தேசத்தின் ஒரு அமைதியான இடத்திற்கு அனுப்பினார். அங்கே ஒரு ஆற்றங்கரையில், எலியா காத்துக்கொண்டிருந்தான். தேவன் காகங்களை அனுப்பி அவனை போஷித்தார்.

6



அவைகள் அவனுக்கு காலையும், மாலையும் அப்பத்தையும் இறைச்சி துண்டையும் கொண்டுவந்தது. மற்றும் எலியா ஆற்றுத் தண்ணீரை குடித்தான்.

7



தேசத்திலே மழையில்லாததினாலே, சீக்கிரமாக அந்த ஆறும் வற்றிப்போயீற்று. தேவனுடைய வார்த்தை உண்மையிலேயே நடந்தேறியது. தேசம் முழுவதும் தண்ணீர் பஞ்சமுண்டாயிற்று.

8



பயிர்கள் வளரவில்லை.  ஜனங்கள் பசியாயிருந்தார்கள். தண்ணீர் இப்போது இல்லையே.  தனக்கு என்ன நடக்குமென எலியா யோசித்திருக்கலாம்.

9

தேவன் எலியாவினிடத்தில், "எழுந்திரு, சாரிபாத்திற்கு போ, அங்கே தங்கியிரு. பார், அங்கே ஒரு விதவையிடம் உன்னை போஷிக்கும்படி கட்டளையிட்டுயிருக்கிறேன்," என்றார். தேவனுக்கு தன்னுடைய ஊழியக்காரரின் தேவைகள் தெரியும்.



10



ஆனால் இப்படி ஒரு வியப்பான வழியிலே போஷிக்கிறாரே; தாழ்மையுடன் எலியா தேவனுக்கு கீழ்ப்படிந்தான். அவன் சாரிபாத்திற்கு போன போது, ஒரு விதவை பட்டணத்து வாசலில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

11

எலியா அந்த பெண்ணிடம், "எனக்கு குடிப்பதற்கு கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா. அப்படியே தயவு செய்து ஒரு ரொட்டி துணிக்கையையும் கொண்டு வா, என்றான்.



12

என்னிடம் அப்பமில்லை, ஒரு பிடி மாவும், கொஞ்ச எண்ணெய் மட்டும் தான் உள்ளது" என்றாள் அந்த விதவை.



13

அவை முடிந்தபின், நானும் என்னுடைய குமாரனும் பட்டினியால் சாவோம் என்று துக்கத்துடன் அந்தப் பெண் தீர்க்கதரிசியிடம் சொல்லியிருந்தாள்.



14

"பயப்படாதே, முதலில் எனக்கு ஒரு சிறிய அப்பம் செய்து கொடு, பின்பு உனக்கும், உன் குமாரனுக்கும் செய்," என்று எலியா சொன்னான். "உன்னுடைய மாவு செலவழிந்து போவதுமில்லை, உன்னுடைய எண்ணெய் குறைந்துபோவதிமில்லை. தேவன் பூமியின் மேல் மழையை கொடுக்கும் வரை இது நடக்கும்."



15

இப்படி நடப்பதற்கு தேவன் ஒரு அற்புதத்தை செய்ய வேண்டும். அவர் அப்படியே செய்தார்! அவளும் அவளுடைய குமாரனும் பல நாட்கள் சாப்பிட்டார்கள். ஆனாலும் மாவு செலவழிந்து போகவுமில்லை, ஜாடியில் எண்ணெய் தீர்ந்துபோகவுமில்லை.



16

எலியா அவர்களுடன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் ஒரு துக்ககரமான காரியம் நடந்தது. விதவையின் மகன் இறந்து போனான்.



17

எலியா அந்த பையனின் சரீரத்தை மேலறைக்கு தூக்கி சென்றான். அவன் தேவனை நோக்கி கூப்பிட்டு சொன்னது, "ஆண்டவரே என் தேவனே, இவனுடைய ஆத்துமா இவனுக்குள் திரும்ப வரட்டும்." எவ்வளவு இயலாத ஒரு ஜெபத்தை பண்ணினான்!



18

தேவன் எலியாவின் வேண்டுதலைக் கேட்டார் மற்றும் அந்த சிறுவனுடைய ஆத்துமா அவனுக்குள் திரும்ப வந்தது, அவன் உயிர் திரும்ப வந்தது. எலியா அந்த பையனைஅவனுடைய தாயினிடத்தில் கொடுத்தபோது. அவள் சொன்னது, "இப்போது இதினிமித்தம் உம்முடைய வாயிலுள்ள தேவனுடைய வார்த்தை உண்மையானது என்று நான் அறிவேன்."



19

மூன்று வருடங்களுக்குப் பின், தேவன் எலியாவை ராஜாவினிடத்தில் திரும்ப அனுப்பி சொல்லச் சொன்னது, "நான் பூமியின் மேல் மழையை அனுப்புவேன்."



20


ஆகாபிடம் போவதா?  அவனுடைய மனைவி யெசபேல் ஏற்கெனவே நூறு தேவனுடைய தீர்க்கதரிசிகளை கொலை பண்ணியிருக்கிறாள்.
21


ஆனால் எலியா வாக்குவாதம் பண்ணவில்லை.  அவன் ஆகாப் ராஜாவிடம் சென்றான்.
22


அவர்கள் இரண்டு பேரும் சந்தித்த போது, எலியா இஸ்ரவேல் மக்களையும் மற்றும் 850 கள்ள தீர்க்கதரிசிகளையும் கூட்டச்சொல்லி சவால் விட்டான்.
23


கார்மேல் மலை என்றழைக்கப்படுகிற இடத்தில், எலியா ஜனங்களோடு பேசினான்.
"ஆண்டவரே தேவன் என்றால், அவரைப் பின்பற்றுங்கள்."
24


எலியா இரண்டு காளை மாடுகளை பலி செலுத்துவதற்காக ஆயத்தம் பண்ணினான்.  ஆனால் அதை எரிப்பதற்கு தீ உபயோகப்படுத்தக்கூடாது.  "நீங்கள் உங்கள் தேவர்களின் நாமங்களை கூப்பிடுங்கள், மற்றும் நான் என்னுடைய தேவனின் நாமத்தை கூப்பிடுவேன்," என்று சொன்னான்.
"அக்கினியால் பதில் கொடுக்கும் தெய்வமே தேவன்."
"சரியாக சொன்னீர்கள்," என்று ஜனங்கள் பதில் சொன்னார்கள்.
25


காலையிலிருந்து மாலைவரை கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய தேவனின் நாமத்தை கூப்பிட்டார்கள்.  அவர்கள் குதித்து நடனமாடினார்கள்.  மற்றும் இரத்தம் வரும்படி கத்தியால் தங்களை கீறிக்கொண்டார்கள்.  ஆனாலும் அக்கினி ஒன்றும் வரவில்லை.
26


பின்பு எலியா தன்னுடைய பலியையும், விறகு கட்டைகளையும் தண்ணீரால் நனைத்து தேவனிடம் விண்ணப்பம் பண்ணினான்.
27


"ஓ தேவனே விண்ணப்பத்தைக் கேளும், நீர் உண்மையான தேவன் என்று இந்த ஜனங்கள் அறிந்துகொள்ளட்டும்...?" அப்பொழுது தேவனுடைய அக்கினி விழுந்தது. அது காளையையும், விறகு கட்டையையும் அவித்துப் போட்டது. பின்பு அது அந்தக் கல் பலிபீடத்தை எரித்துப்போட்டது!
28


ஜனங்கள் அதை பார்த்த போது, அவர்கள் சத்தமிட்டார்கள், "ஆண்டவர், அவரே தேவன்!" அப்பொழுது எலியா சொன்னது, "பாகாலின் தீர்க்கதரிசிகளை பிடியுங்கள். அவர்களில் ஒருவனயும் தப்பவிடாதீர்கள்!"
29


ஆகாப் அநேக நாட்களுக்கு முன்பாக என்ன செய்தானோ அதையே எலியாவும் செய்தான். அவன் கள்ளத்தீர்க்கதரிசிகளை கொன்று போட்டான்.
30


பின்பு தேவனுடைய ஊழியக்காரன் ஆகாப்பினிடத்தில் மழை வந்து கொண்டிருக்கிறது என்றான். உடனே ஒரு சிறிய மேகம் தோன்றியது.
31


சிறிது நேரத்தில், வானத்தில் கருமேகம் உருவாகி காற்றுவீச கடுமையான மழை பெய்யத் தொடங்கியது. தேவன் மழையை அனுப்பினார். எலியா உண்மையை அவர்களுக்கு சொன்னான் என்பதை தேவன் ஜனங்களுக்கு காண்பித்தார். தான் ஒருவரே மெய்யான தேவன் என்று காண்பித்தார்.
32



ஆகாப் தேவனையும், அவருடைய ஊழியக்காரனான எலியாவையையும் கனம் பண்ணீனான் என்று நினைக்கிறீர்களா? இல்லை! உண்மை என்னவென்றால், யெசபேல் எலியாவை கொல்லப்பார்த்தாள், ஆனால் அவன் தப்பிவிட்டான்.

33



முடிவிலே, ஆகாப் ஒரு போரில் இறந்து போனான் மற்றும் யெசபேலை அவனுடைய ஊழியக்காரர்கள் அரண்மனையின் உயர்ந்த மதிலிலிருந்து கீழே தள்ளிவிட்டார்கள். அவள் கீழே இருந்த கல்லிலே விழுந்து அடிப்பட்டு சிதைந்து மடிந்தாள்.

34



எலியாவுக்கு என்ன நடந்தது?

35



தேவன் ஒரு நாள் குதிரை பூட்டப்பட்ட அக்கினிமயமான ரதங்களை அனுப்பினார், மற்றும் எலியா, தேவனுக்காக அக்கினியாயிருந்த மனிதன், பரலோகத்திற்கு சுழற்காற்றிலே எடுத்துக் கொள்ளப்பட்டான்.

36

அக்கினியின் நாயகன்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

1 இராஜாக்கள் 17-19, 2 இராஜாக்கள் 2

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.